# இயல் - 1
# முன்னுரை

## ஆய்வுப்பொருள்

ஆண்டாள் பிரியதர்ஷினியின் 'படைப்புக்கலை' என்னும் தலைப்பை ஆய்வுப் பொருளாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப் பெறுகிறது.

## ஆய்வு நோக்கம்

தமிழ் இலக்கியம் தன்னையும், தன் வடிவத்தையும் காலத்திற்குக் காலம் மாற்றிக் கொள்ளும் தன்மையைப் பெற்று வந்துள்ளது. தமிழ் இலக்கியம் உள்ளடக்கம், வெளிப்பாடு ஆகிய கூறுகளில் மிகுந்த மாற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றுள்ளது. புதினம், சிறுகதை, கவிதை, நாடகம் போன்ற இலக்கிய வடிவங்கள் குறிப்பிட்ட இயங்கு சக்தியாக இருக்கின்றன. தனிமனித சிக்கல்களுக்கும், குடும்பச் சிக்கல்களுக்கும், சமுதாயச் சிக்கல்களுக்கும் தீர்வு காண்பதற்காகவும் ஒரு புதிய சமூக அமைப்பை அமைப்பதற்காகவும் புதின இலக்கியம் பயன்படுத்திக்கொள்கிற போக்கு வலுப்பெற்று வருகிறது. சமுதாயப் பொறுப்புணர்வுடன் மனித வாழ்க்கையும் அவர்கள் வாழ்க்கையில் உண்டாகும் சிக்கல்களும் எத்தன்மையானது என்பதைக் கண்டுணர்தல் வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது.

மனித வாழ்க்கை நன்மை தீமை அனைத்தும் நிறைந்தது. அவை அனைத்தையும் படம் பிடித்துக் காட்டுவது தான் புதினம். மக்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற இழப்புகளையும், இன்பங்களையும் வேதனைகளையும் அவர்தம் உணர்வுகளையும் ஒலிக்கும் எதிரொலியாகத் திகழ்வது புதினங்கள் ஆகும். அவ்வாறெழும் புதினங்கள் அரிய கலைப் படைப்பாகின்றன. அவ்வகையில் தமிழ் இலக்கியப் பதிவுகளில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் புதினங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

தமிழ்ப் புதின வரலாற்றை ஆராய்ந்தால் ஒவ்வொரு கால கட்டத்திலும் சமூகக் கருக்கள் புதினங்களின் மையமாக விளங்குகின்றன. அதுபோல ஆ.பி.யின் புதினங்களிலும் சமூகக் கருக்கள் பொதிந்துள்ளன. ஆண்-பெண் உறவுநிலை, கதை மாந்தர்களின் பல்வேறுபட்ட மனப்போராட்டங்கள், பொருளதாரச் சிக்கல்கள், பெண்ணியச் சித்திரிப்பு, சமுதாயச் சிந்தனை, சமூகச் சிக்கல், வாழ்வியல் வெளிப்பாடு போன்றவை இவருடைய புதினங்களில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன.

ஆ.பி.யின் புதினப் படைப்புகளை விரிவாகவும், முழுமையாகவும் அப்புதினங்களின் அம்சங்களை கலைநயத்துடன் ஆசிரியர் அமைத்துள்ள பாங்கினை பல்வேறு கோணங்களிலும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

சமூக - மேம்பாடு குறித்த எண்ணங்கள் இவரது படைப்புகளில் வழிச் சுட்டுவதும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆய்வு எல்லை

ஆய்வுக்குரிய கால வரையறை கருதியும், பக்க வரையறை கருதியும், எழுத்தாளர் ஆ.பி.யின் புதினங்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றுள்ளது.

## ஆய்வுக்கு உட்படுத்திய புதினங்கள்

1. சுருதி பிசகாத வீணை (ஏப்ரல்.1987)
2. தாளம் தப்பிய தாலாட்டு (மே.1994)
3. கதாநாயகி, செலுலாய்டு அபாயம் (ஜீன்.1998)
4. சாருலதா, சின்னவள், கானல் சொர்க்கம் (மார்ச், 1999)
5. கனவுகள் கைப்பிடிக்குள், விலை (நவம்பர்,2000)
6. சிகரம் சிலந்திக்கும் எட்டும், விடியும் நேரம், சூரசம்ஹாரம், (டிசம்பர்,2000)
7. வேடிக்கை மனிதர்கள், உயிரெழுத்து ஆயுதஎழுத்து, கட்டில் மனசு (நவம்பர்,2001)
8. தகனம் (டிசம்பர், 2001)
9. சூரியனை விடிய வைப்போம் (புதுக்கவிதைப் புதினம், 2004)

## கருதுகோள்

ஆண்டாள் பிரியதர்ஷினியின் புதினங்கள் வெளிப்படுத்தும் கலைத்தன்மை மற்றும் களங்களை அடிப்படையாகக் கொண்டும், கலைநயம் மற்றும் பெண்ணியச் சித்திரிப்பு, சமுதாயச் சிந்தனைகளோடு, சிக்கல்களையும் விளக்கித் தீர்வுகளை கண்டறிய முனைவதைக் கருதுகோளாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பெறுகின்றது.

## ஆய்வு அணுகுமுறைகள்

ஆய்வாளர்கள் தம்முடைய ஆய்வேடுகளில் பல்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்துவதுண்டு. அவ்வகையில் இந்த ஆய்வு, விளக்கமுறை அணுகுமுறை (Descriptive Approach), திறனாய்வு அணுகுமுறை (Critical Approach), பெண்ணிய அணுகுமுறை (Feminist Approach), சமூகவியல் அணுகுமுறை (Social Approach), பகுப்பாய்வு அணுகுமுறை (Analytical Approach), ஆகிய அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பெறுகின்றது.

## ஆய்வு முன்னோடிகள்

'படைப்புக்கலை' பண்பினைக் கருதுகோளாகக் கொண்டு பிஎச்.டி., எம்.ஃ.பில் பட்ட ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. இவ்ஆய்வுக்குக் கீழே குறித்த ஆய்வுகள் முன்னோடியாக அமைகின்றன.

### பிஎச்.டி., ஆய்வேடுகள்

1. முத்துராமலிங்கம். எஸ். - 'வைரமுத்து படைப்புக்கலை' மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 2002.

2. செல்லத்தாய் பொன்னுத்துரை - 'தமிழ் நாவல்களில் குடும்ப அமைப்பும் சிதைவும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 2002.

3. செண்பகவள்ளி. இரா. - ‘அப்துல்ரகுமானின் படைப்புக்கலை’
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை,
2009.

4. செல்வசங்கரன். த. - ‘ஆதவனின் படைப்புக்கலை’
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை,
2010.

## எம்.ஃ.பில் பட்ட ஆய்வேடுகள்

1. சீனிவாசன். ச. - ‘ஆதவன் நாவல்கள்’
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை,
1987.

2. கீதா.கோ.வே. - ‘தி. ஜானகிராமனின் நாவல்கலை’
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை,
1988.

3. சரவணச்செல்வம் - காகிதமலர்கள் நாவல் - ஒரு
திறனாய்வு,
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
1994.

### ஆய்வு மூலங்கள்

ஆய்வு மூலங்களாக ஆ.பி.யின் படைப்புகள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

### அ. முதன்மை ஆதாரங்கள்

ஆண்டாள் பிரியதர்ஷினியின் படைப்புகளுள் ஒன்பது தலைப்பில் ஆகிய புதினங்கள் மட்டும் முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

### ஆ. துணைமை ஆதாரங்கள்

இவ்ஆய்வின் துணைமை ஆதாரங்களாக ஆ.பி.யின் சிறுகதை, கவிதை, கட்டுரை நூல்கள், இதழ்கள், அகராதிகள், களஞ்சியங்கள், திறனாய்வுக் கட்டுரைகள் போன்றவை பயன்படுத்தப்பெற்றுள்ளன. ஆ.பி.யின் வாழ்க்கைக் குறிப்பு நேர்காணல், அறிஞர் கருத்துக்கள் போன்றனவும் இடம் பெற்றுள்ளன.

### ஆய்வுப்பகுப்பு

“ஆண்டாள் பிரியதர்ஷினியின் படைப்புக்கலை” என்னும் இவ்ஆய்வு கீழ்க்காணும் ஏழு இயல்களைக் கொண்டு அமைகின்றது.

1. முன்னுரை
2. படைப்பாளியும் படைப்புச் சூழலும்
3. கலையும் களத்தேர்வு நெறிமைகளும்
4. பெண்ணியச் சித்திரிப்பு
5. சமுதாயச் சிந்தனை
6. கலைநயம்
7. முடிவுரை

‘முன்னுரை’ என்னும் இயல், ஆய்வுப் பொருள், ஆய்வின் நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆ.பி. யின் படைப்புகள், ஆய்வு அணுகுமுறைகள், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு மூலங்கள், ஆய்வுப் பகுப்பு ஆகியவற்றை விளக்குவதாக அமைகின்றது.

‘படைப்பாளியும் படைப்புச்சூழலும்’ என்னும் இயல் ஆண்டாள் பிரியதர்ஷினியின் இளமைக் காலம், அவர்தம் எழுத்தார்வம் வாழ்க்கைப் பணி, குடும்பம் அவரின் படைப்புகள் பெற்ற விருதுகள் குறித்து ஆய்வதாக அமைகின்றது.

‘கலையும் களத்தேர்வு நெறிமைகளும்’ என்னும் இயல் ஆண்டாள் பிரியதர்ஷினியின், புதினக்களம், களத்தேர்வு நெறிமுறைகள், களத்தின் தனித்தன்மை. கதைப்பின்னல் ஆகியவற்றை ஆராய்வதாக அமைகின்றது.

‘பெண்ணியச் சித்திரிப்பு’ என்னும் இயல், இன்றைய சமுதாயத்தில் கணவனைச் சார்ந்து வாழும் பெண்களின் நிலை, பெண்ணுக்குரிய உரிமை மறுக்கப்படும் நிலை, வரதட்சணைக் கொடுமை காரணமாகத் தனித்து வாழும் பெண்களின் நிலை, மரபு நிலையில் வாழும் பெண்களின் நிலை, மரபை எதிர்த்து வாழும் பெண்களின் நிலை, மரபை விட்டு ஒதுங்கி வாழும் பெண்களின் நிலை, குடும்ப உறவுகளில் பெண்களின் நிலை, பெற்றோரின் வற்புறுத்தலால் திருமணம் செய்யும் பெண்களின் நிலை, கைம்பெண்களின் நிலை, வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலை, கணவனைப் பிரிந்து வாழும் பெண்களின் நிலை, பெண்களின் இன்றைய நிலை போன்ற சிக்கல்களுக்கு அடிப்படை எதுவென்று அலசுவதும், அச்சிக்கலுக்கானத் தீர்வை முன்னிறுத்துவதும் புதுமைப் பெண்ணின் நிலை,

பெண்களைப் பெண்களே வெறுக்கும் நிலை ஆகியவை பற்றி ஆராய்வதாக அமைகின்றது.

'சமுதாயச் சிந்தனைகள்' என்னும் இயல் தொழிலாளர் நிலை, வறுமைநிலை, பெண்கள் கல்வி நிலை, அரசியல் நிலை, வேலையின்மை, காதல், ஆணாதிக்கநிலை, சமூகச் சிக்கல்கள் போன்றவற்றைத் தெளிவுறுத்துவாக அமைகின்றது.

'கலை நயம்' என்னும் இயல், புதின உத்தி – விளக்கம், கதைத் தொடக்கம், தலைப்புப் பொருத்தம், உரையாடல், பின்னோக்கு, நனவோடை உத்தி, கதைமுடிவு உத்தி போன்ற உத்தி முறைகளையும், புதினமொழி நடை – விளக்கம், ஒலி நிலை, சொல், தொடர்நிலை பற்றியும், பழமொழி, வருணனை, மேற்கோள் பயன்பாடு, பிறமொழிக் கலப்பு நடை ஆகியன பற்றியும் ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது.

'முடிவுரை' என்னும் இயல் ஆய்வில் கண்டமுடிவுகளைத் தொகுத்துத் தருவதோடு மேலும் இவ்ஆய்வினைத் தொடர்ந்து நிகழ்த்த வாய்ப்புள்ள ஆய்வுக்களங்கள் குறித்துச் சுட்டுவதாகவும் அமைகின்றது.

துணைநூற்பட்டியல் என்னும் பகுதியில் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பெற்ற நூல்கள் இடம் பெறுகின்றன.

பின்னிணைப்புக்கள் என்னும் பகுதியில் ஆண்டாள் பிரியதர்ஷினியின் நிழற்படம், பேட்டி மற்றும் ஆ.பி. பற்றி வெளிவந்த கட்டுரைகள், விமரிசனங்கள், மதிப்புரைகள் ஆகியவற்றின் நிழற்பதிப்புக்கள் போன்றவை இடம் பெறுகின்றன.